
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 16 மார்ச் 2003




வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.


## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | ஏலகிரி முகாமுக்கு வாருங்கள் | 10 |
| 3. | கிறிஸ்துவின் சுவிசேஷம் | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 17 |
| 5. | கலாத்தியர் ஒரு கண்ணோட்டம் | 20 |
| 6. | வாலிபர் பகுதி | 21 |
| 7. | சிறுவர் பகுதி | 24 |
| 8. | ஆதித் திருச்சபை | 26 |
| 9. | அதிக மேன்மையான வழி | 30 |

# THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

**Editor**
**S. Rajanayagam**

**Honorary Editor**
**J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.16 March- 2003 Issue-3**


**ஆசிரியர் உரை**

## ...தார்...நார்...பார்

**தா**ன் விரும்புகின்ற ஒரு மனிதன் பற்றியோ அல்லது தான் மதிக்கின்ற ஒரு நண்பர் பற்றியோ அல்லது தான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு தலைவர் பற்றியோ தனது கருத்தை அல்லது மதிப்பீட்டை வெளிப்படுத்த நேரும்போது, அதற்காக மிகத் தேர்ந்த வார்த்தைகளைப் பொறுக்கியெடுப்பதென்பது இந்நாட்களில் வாழும் நமக்குப் புரியாத ஒன்றல்ல. இக்காலத்து மனித மனங்களின் தன்மையையும், நம்மைச் சுற்றியிருக்கின்ற சமுதாயத்தையும், நம் காலத்து அரசியலையும் நாம் அப்படியே கவனித்தால், அடியேனின் இக்கூற்று உண்மைதான் என்பதை ஒருவாறு ஒத்துக்கொள்ளமுடியும். இப்படிப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் அர்த்தம் இருக்கிறதோ இல்லையோ, அலங்காரத்திற்கு குறைவேதுமிருக்காது. அநேக சமயங்களில், சொல்லப்படும் நபருக்கும், பயன்படுத்தும் வார்த்தைகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை யென்பது பட்டவர்த்தனமாகத் தெரியும்.

இப்படி மரியாதை என்ற பெயரில், தனக்குப் பிடித்தவர்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்திப் பழக்கப்பட்ட மனிதன், ஆன்மீகத்திற்கு வரும்பொழுதும், இப்பழக்கத்திற்கு விடை கொடுக்க விரும்புவதில்லை. ஜென்மீகமும், ஆன்மீகமும் முற்றிலும் வேறுபாடு கொண்டவை என்பதை மானிடம் எந்தவொரு காலகட்டத்திலும் ஒழுங்காக உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆன்ம காரியங்களை ஆழமான பொருளில் அறிந்து கொள்வதற்கு முயற்சியும், பயிற்சியும், ஆராய்ச்சியும் தேவை என்பதையும் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக, தான் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை கொண்ட குடும்பத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக, அது உண்மைதானா என்பது பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், அதைப்பற்றி வாய் நிறையப் பேசவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்காக தனக்குத் தெரிந்த உயரிய வார்த்தைகளைப் பயன்படுத்தத் தயங்குவதேயில்லை. மத

நம்பிக்கை என்ற பெயரில் பாடப்படும் பக்தி பாடல்களையும், சொற்பொழிவு என்ற பெயரில் நிகழ்த்தப்படும் பக்தியுரைகளையும் நாம் கவனித்தால், இக்கருத்தும் உண்மைதான் என்பதை இதயமுள்ளவர்கள் ஏற்றுக்கொள்வர், இப்படிப்பட்டவர்கள், தங்கள் மத நம்பிக்கையை வெளிப்படுத்தி, அதை நிலை நிறுத்துவதற்கு அறிவுப்பூர்வமான ஆதாரங்களையோ அல்லது உண்மைதான் என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய அனுபவத்தையோ சான்றாகக் கொள்ளாமல், பெரும்பாலும் ஒப்பிடுதலையும், கற்பனையையும் மூலதனமாகக் கொண்டிருப்பர்.

ஆனால், பரலோகத்தின் தேவனால் நமக்கு கொடையாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்திற்கு வரும்போது, அங்கே ஒப்பிடுதலுக்கும், கற்பனைக்கும் சுத்தமாக வேலையில்லையென்பது அப்பட்டமாகத் தெரியும். பரிசுத்த ஆவியானவர் ஏவினபடி பரிசுத்த மனிதர்கள் தேவனுடைய சத்திய வார்த்தைகளை எந்தக் கலப்புமில்லாமல், பரலோக மணம் மாறாமல் அப்படியே வடித்துக்கொடுத்துள்ளனர். (II தீமோ. 3:16,17; I. பேதுரு 1;21). சர்வ வல்லவரின் மகத்துவங்களையும், மகிமைகளையும் தங்கள் வாழ்வில் கண்டும், ருசித்தும், அவருடைய அற்புத வழிநடத்துதல்களை அனுபவித்தும் எழுதிக் கொடுத்துள்ளனர். கிறிஸ்தவம் உலகெங்கிலுமுள்ள ஏராளமானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதற்கும், தன்னிகரில்லாத மார்க்கமாக என்றென்றும் திகழ்ந்து கொண்டிருப்பதற்குமான அடிப்படை இதுதான். அப்பரிசுத்தர்கள் கண்ட அந்த அலாதியான ருசியையும், ஆற்றாமையை ஏற்படுத்தும் அவர்களின் அனுபவத்தையும் நாம் வேதாகமத்தின் பக்கங்களில் பார்த்துப் பார்த்து மகிழலாம்.

ஆம், முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்தவனென்று நம்பப்படுகின்ற பக்தன் யோபுவின் நண்பர்களில் ஒருவனாகிய எலிப்பாஸ் பரலோகத்தின் தேவன் பற்றி, " அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறவர்" (யோபு 5:18) என்று சொல்லுகிறானே அது என்ன கற்பனையானதா? அல்லது மோசேயின் காலத்தைச் சேர்ந்த மாமன்னன் தாவீது, "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன், தேவனுடைய பிள்ளைகள் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்திற்கு இரந்து திரிகிறதையும் நான் கண்டதில்லை" (சங். 37;25) என்று எழுதியுள்ளாரே, அதுதான் கற்பனையாக இருக்க முடியுமா? சொல்லுங்கள். உன்னதரோடு அவர்களுக்கிருந்த இனிய உறவின் வெளிப்பாடுகள்ளல்லவா அவைகள்! அச்சில் வார்த்து எடுத்தது போன்ற அதே ரகத்தைச் சேர்ந்தது தான், இம்மாத தலைப்புக்காக பவுலடியார் நமக்கு எழுதிக் கொடுத்துள்ள வார்த்தைகளும். ஆம், தன் நம்பிக்கையாயிருக்கிற தேவனைப் பற்றி ஏதோ சொல்லவேண்டுமென்பதற்காகவோ, அப்படிச் சொல்வது சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காகவோ எழுதப்பட்டதல்ல அவை. முழுமையாக அனுபவித்து, முற்றும் உணர்ந்த நிலையில் செதுக்கப்பட்ட வார்த்தைகள் அவை. இதோ கவனியுங்கள். **நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று**

**நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்** (II கொரி 1;9,10).

சரி, தப்புவித்தார், தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்ற வார்த்தைகள் அவரின் அனுபவ வார்த்தைகள் எனில், அதை எங்கே அனுபவித்தார், எப்படி அனுபவித்தார் என்ற நியாயமான கேள்வி வருகிறது. அப்படித்தானே! அதையும் பார்த்துவிடலாம் வாருங்கள்.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து பட்டணத்தாருக்கு இரண்டு நிருபங்களை எழுதினார் என்பது நம் அனைவருக்குமே தெரியும். சொல்லப்போனால், அவர் மூன்று நிருபங்களை எழுதியிருக்கவும் வாய்ப்புண்டு. நான் இப்படிச் சொல்வதற்கு 1 கொரி 5;9-ஐ நீங்கள் ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அவைகளில் இரண்டு எழுத்து வடிவில் நம்மிடம் உள்ளது. தப்புவித்தார், தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று சொல்லத்தக்க அளவில் அவருக்கு கிடைத்த இனிப்பும், கசப்பும் கலந்த அவ்வனுபவம், நமக்குக் கிடைத்துள்ள இரண்டு நிருபங்களுக்கிடையில் நடந்துள்ளது. இன்னும் இந்நாட்கள் அவருடைய மூன்றாவது நற்செய்தி பயணத்தின் காலத்துக்குப் பொருந்தி வருகிறது. இச்சம்பவம் எபேசு பட்டணத்தில் நிகழ்ந்துள்ளது. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தின் இறுதியில், இப்பட்டணத்திற்குப் போக வேண்டுமென்ற தேவ ஏவுதலின்படியான திட்டத்தை வெளிப்படுத்துகிறார். **ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன். ஏனெனில், இங்கே பெரிதும் அனுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்** என்று. (1. கொரி 16;8,9).

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்படியும், தன்னுடைய திட்டத்தின்படியும், அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் புறப்பட்டு எபேசு பட்டணத்திற்கு வந்து சேர்ந்தான் (அப். 19;1) அங்கே தன்னுடைய வழக்கத்தின்படி, பக்தியுள்ள யூதர்கள் கூடும் இடமாகிய ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, மூன்று மாதமளவும், சபையாகிய தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து சம்பாஷணைபண்ணி புத்தி சொல்லிக்கொண்டு வந்தான் (அப். 19;8) அப்பொழுது, பக்தி வேடம் பூண்டு ஜெப ஆலயத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்த சில போலி விசுவாசிகளால், தன் ஊழியத்துக்கு ஊறு நேர்ந்தபோது, நம்மில் அநேகரைப் போல் நைசாக நழுவ முயற்சிக்காமல், அசல் விசுவாசிகளின் ஆத்துமாக்கள் மீது பாரம் கொண்டு, **திறன்னு** என்னும் பேர் கொண்ட ஒருவனுடைய பாடசாலையில் அனுமதி வாங்கி, அவர்களின் ஆன்ம மேம்பாட்டுக்காக அனுதினமும் சம்பாஷித்து வந்தான் (அப் 19;9).

அவருக்காக உண்மையாகப் பாடுபடும் தேவ மனிதர்களை ஒருபோதும்

கைவிடாத பரலோக தேவன், பவுலின் கைகளினாலே அநேக விசேஷித்த அற்புதங்களைச் செய்தார். (19;18). பவுலின் சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டுவந்து வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப் போயின. அத்தோடு, பொல்லாத ஆவிகளும் சொல்லாமல் கொள்ளாமல் பறந்தன (19;12) அங்கே, பவுலின் வல்லமையைக் காப்பியடிக்க முயற்சித்த பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவாவின் ஏழு குமாரர்களும் அரை குறை ஆடையோடு ஓட்டம் பிடிக்கும்படி தேவன் செய்தார். இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது மாயவித்தைக் காரர்களாயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து, எல்லோருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள். தேவனுடைய வசனம், அப்பட்டணத்தில் இப்படிப்பலமாய் விருத்தியடைந்து மேற்கொண்டது (19 : 16,20). அங்கே நடந்த காரியங்களை அப்படியே எண்ணிப்பாருங்கள் அதிரடியான அற்புதக் காட்சிகள், பொல்லாத ஆவிகளின் அடக்கமான புறப்பாடு. ஏமாற்றுக்காரர்களின் நிர்வாண ஓட்டம். மாயவித்தைக்காரரின் புத்தகக் குவியல் எரிப்பு. இதன் மூலம் ஆத்தும அறுவடையையும், கர்த்தருடைய வார்த்தைகளின் விருத்தியையும் கண்டு ஆனந்தப்பட்ட பவுலடியார், தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டு பேராகிய தீமோத்துவையும், எரஸ்துவையும் மக்கெதோனியாவிற்கு அனுப்பிவிட்டு, தான் பின்னும் சில காலம் ஆசியாவிலேயே தங்கினான் (19;23).

இப்பொழுதுதான், நம்முடைய ... தார்...றார்...பார் என்று சொல்லுவதற்கு ஏதுவான காரணங்களுள் ஒன்று ஆரம்பமாகிறது. ஆம் பவுலடியார் சீக்கிரம் வெளியேறிவிடுவான் என்று காத்திருந்த ஒரு தேவ விரோதக் கும்பல், அவன் இன்னும் சிலகாலம் அங்கேயே தங்கிவிட முடிவெடுத்ததைக் குறித்து கலக்கமடைந்து, சூழ்நிலையை எதிர்கொண்டு முறியடிக்க சதித்திட்டம் தீட்டியது. அதற்குத் தலைமையேற்றவன் விக்கிர வியாபாரியாகிய தெமேத்திரியு. பல மார்பகங்களைக் கொண்ட ஆபாச தேவதையாகிய தியானாளின் கோவிலைப்போல வெள்ளியினால் சிறிய கோயில்களைச் செய்து, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயத்தை வருவித்துக் கொண்டிருந்தவன். தொழிலாளிகளுக்கே மிகுந்த ஆதாயம் என்றால், முதலாளியாகிய இவனுக்கு எவ்வளவு பெரும் ஆதாயம் இருந்திருக்குமென்று அப்படியே மனக்கணக்கு போட்டுக்கொள்ளுங்கள்.

கர்த்தருடைய வசனம் பலமாய் விருத்தியடைந்து மேற்கொண்டதினால், விக்கிரக வணக்கம் வேகமாக மங்கி வருவதை இவனால் தாங்க முடியவில்லை. அதற்கு காரணம், தியானாளின் மீது இவனுக்கு இருந்த அதீத பக்தியல்ல. மாறாக, வெகு வருமானம் தந்த தனது தொழில் எங்கே படுத்துக்கொள்ளப்போகிறதோ என்ற பயம் தான். ஆனால் இந்த உண்மையை வெளியே சொல்லி ஆதரவு தேட முடியாது. ஆகவே, கம்யூனிசம் இல்லாத அந்த நாட்களிலேயே தன்னையொரு தொழிற்சங்கவாதியாக மாற்றிக்கொண்டு, இவனிடத்தில் தொழில் செய்கிறவர்களையும், இவனைப்போல் தொழில்

செய்கிறவர்களையும் திட்டமிட்டு உசுப்பிவிடுகிறான். நம்முடைய தொழில் அற்றுப்போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதென்று கூச்சல் போட்டதோடல்லாமல், மகா தேவியாகிய தியானாளுடைய கோவில் பற்றியும் அவளுடைய மகத்துவம் அழிந்து போவது பற்றியும் பேசுகிறான். பிழைப்புப் பிரச்சினை பற்றிமட்டும் பேசினால், பட்டணத்தாரின் பரிவு கிட்டாதென்பதால் மிக லாவகமாக தன்னுடைய சோத்துப் பிரச்சினைக்கும், ஜனங்களின் பக்திப் பிரச்சினைக்கும் முடிச்சுப்போட்டு விடுகிறான். அதன்மூலம் அங்கே அவனுக்கு வெற்றியும் கிடைத்துவிடுகிறது. ஆம், கிட்டத்தட்ட ஒட்டுமொத்த பட்டணமும் கோபத்தால் நிறைந்தது; கலக உணர்வு பட்டணம் முழுமையையும் கவ்விக்கொண்டது. "எபேசியருடைய தியானாளே பெரியவள்" என்று சத்தமிட்டு தங்கள் மூடப் பக்தியைத் தீர்த்துக் கொள்ள முற்பட்டனர்.

கலகம் உச்சத்தை அடைந்தபோது, பவுலுக்கு வழித்துணையாய் வந்த மக்கெதோனியராகிய காயுவையும், அரிஸ்தர்க்குவையும் அவர்கள் இழுத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அரங்க சாலைக்குள் பாய்ந்தோடினார்கள். அவர்களுக்கேற்பட்ட கதியைக் கண்டு பதறிப்போன பவுல், உடனடியாக உள்ளே போய் அவர்களுடன் சேர்ந்து கொள்ள முயற்சித்தான். ஆனால், சீடர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினர். அதுமாத்திரமல்ல, அவனுக்கு நண்பர்களாயிருந்த ஆசியா நாட்டுத் தலைவர்களில் சிலரும் அவனுடைய முயற்சியைக் குறித்து எச்சரித்தனர். வேறு வழியில்லாமல் அவரும் அதை ஏற்றுக்கொண்டார். அரங்க சாலைக்குள் இழுத்துச் செல்லப்பட்ட இருவர் பற்றிய விபரம் நமக்குச் சொல்லப்படவில்லை. ஒருவேளை, அவர்கள் உயிருக்கும், பவுலடியாரின் உயிருக்கும் அங்கே எக்கச்சக்க ஆபத்து நேர்ந்திருந்தாலும், அவர்கள் மரித்துப் போனார்கள் என்று சொல்வதற்கு நமக்கு எந்தத் தடயமும் இல்லை. எப்படியோ கலகம் அமர்ந்தபின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக்கொண்டு, மக்கெதோனியாவுக்கு போகப் புறப்பட்டான் (அப் 20;1).

சரி, இப்பொழுது பவுலுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் நேர்ந்த இந்த சம்பவத்திலிருந்தும், இதைச் சொல்லுவதற்கு அவர் பயன்படுத்திய வசனப் பகுதியிலிருந்தும் நாம் நமக்குப் பயன்படும் சில பாடங்களை கற்றுக் கொள்வோம்.

## I. பவுலுக்கு நேர்ந்த தீமையின் மாயத்தோற்றம்

...தார்...றார்...பார்-க்காகப் பவுல் மனதிலே கொள்ளும் நிகழ்ச்சியிலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற முதல்பாடம், தீமையும் சில நேரங்களில் ஜெயிப்பது போலத் தோன்றுமென்பது.

எபேசு பட்டணத்தை சத்தியத்தால் நிரப்ப தேவன் பவுலடியாரைப் பலமாகப் பயன்படுத்தியபோது, அசத்தியம் தள்ளாடித் தடுமாறியது. மக்களின் ஆன்மீக சூனியத்தை மூலதனமாகக் கொண்டு வியாபாரம் செய்த தெமேத்திரியுவுக்கும், அவன் கூட்டாளிகளுக்கும் பலத்த அடிவிழுந்தது. பெருத்த வருமானமும், அது

பெற்றுத் தந்த வெற்று மரியாதையும் மறைந்து போகும் நிலை தோன்றியது. இங்கே அவன், என் வருமானமும், அது பெற்றுத்தந்த மரியாதையும் போச்சு, வாங்க எல்லோரும் வீதியில் இறங்கிப் போராடலாம் என்று கூப்பாடு போட்டிருந்தால் எத்தனைபேர் வந்திருப்பார்கள்? சொல்லுங்கள். ஆகவே, அவன் தீர்க்கமாகச் சிந்தித்து, சொந்த பிரச்சனையைப் பொதுப்பிரச்சினையாக்க முயற்சித்தான். அதற்காக அவன் கண்ணுக்குப் பெரிதாகத் தெரிந்தது மக்களின் மத உணர்வு. லேசாக பற்ற வைத்தான்,குபீரெனப் பிடித்துக் கொண்டது. ஆஹா, திட்டம் கனகச்சிதமாக நிறைவேறி, வெற்றியும் அவன் கணக்குப்படி கிடைத்துவிட்டது. பட்டணம் முழுவதும் கலகத்தால் நிறைந்த போது, தெமேத்திரியு என்ன நினைத்திருப்பான்? பிரச்சினை தீர்ந்தது. அரங்க சாலைக்குள் போன இரண்டு பேரும் அவுட். பவுலும் தப்பிக்க முடியாது. இனி வியாபாரம் படுஜோர் என்று தானே எண்ணியிருப்பான். ஆனால் அவன் நினைத்த மாதிரி காரியங்கள் நடந்ததாகத் தெரியவில்லை. ஆம், அவ்விருவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவோ, பவுலுக்கு வேறு சேதம் எதுவும் ஏற்பட்டதாகவோ வேதாகமத்தில் இல்லை. ஆகவே, தெமேத்திரியுவின் சதியை தேவன் முறியடித்தார் என்று நாம் நம்ப அங்கே இடமுண்டு.

அன்பானவர்களே, இச்சூழலை நாம் நம்முடைய வாழ்க்கையோடும் இன்றைய நடைமுறைகளோடும் ஒப்பிட்டுப் பார்த்தால், அப்படியே பொருந்துகிறது நன்றகவே தெரியும். எத்தனையோ சமயங்களில், தீமையும், தீமை செய்கிறவர்களும் நம்முடைய கண்களுக்கு முன்பாக வெற்றி பெறுவது போலத் தோன்றும். அதற்கான ஆதரவும், அவர்களுக்கான ஆதரவும் பெருந்திரளாகப் பெருகுவது போலவும் தெரியும். இனி அவ்வளவுதான் “முடிந்தோம்” என்று எண்ணவும் தோன்றும். ஆனாலும் தேவன், ஏதாவது சிறப்பு நோக்கங்கள் இருந்தாலொழிய தம்முடையவர்களை விட்டு விலகுவதில்லை. உதாரணமாக, யோசேப்பை எடுத்துக் கொள்ளுங்கள். நீதியாக நடந்த அவன் வாழ்க்கையில் அவனுக்கு நேர்ந்தவைகளைக் கவனித்தால், “இனி யோசேப்பு அவ்வளவுதான்” என்பது போலவே தோன்றியது. படுகுழியில் போட்டது (ஆதி 37: 24). சிறைச்சாலையில் தள்ளியது (ஆதி 39 : 20) போன்ற இவைகள் எல்லாம் இன்னும் யோசேப்புக்கு வாழ்வுண்டு என்றா சொல்லிற்று? இல்லை, “முடிந்தான்” என்றுதானே சொல்லியது. தீமை தலைவிரித்தாடினபடியால் யோசேப்பின் தேவன் எங்கே? என்று கேட்கும்படி கூட செய்தது. ஆனால், முடிவு? முற்றும் வேறாகத்தானே இருந்தது. **சிங்கக் கெபி** தானியேலும் (தானி 6:16, 17) **அக்கினிச் சூளை** சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, போன்றவர்களும் (தானி 3:21) நமக்கு இதைத்தானே சொல்லுகிறார்கள்.

ஆகையால், அருமையானவர்களே, கூடுகிற கூட்டத்தைப் பார்த்தும், அவர்களின் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தும், எதிரே தெரிகின்ற சூழலைப்

பார்த்தும் நாம் ஒரு போதும் கலங்கத் தேவையில்லை. ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும் இதுதான் உண்மை. தேவனுக்கு எதிராக இருப்பவர்களுக்கு, சத்தியத்தை நேசியாதவர்களுக்கு, உண்மை சத்தியத்தை போதிக்காதவர்களுக்கு, உண்மை சத்தியத்தின்படி வாழாதவர்களுக்கு கூட்டம் சேருவது போலும், வெற்றி கிடைப்பது போலும் தோன்றும். ஆனாலும் முடிவு அவர்கள் நினைப்பது போல் இருக்காது. தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார் (அப். 17; 30) பிதாவின் சித்தப்படி செய்கிறவர்களுக்கே பரலோக பாக்கியமும் வாடாத ஜீவகிரீடமும் கிடைக்கும். ஆகவே, சோர்ந்து போக வேண்டாம்.

## II. பவுலின் தைரியமும், சகோதர சிநேகமும்

... தார் ... றார் ... பார் என்பதை எடுத்துரைக்க பவுல் மனதிலே கொள்ளும் நிகழ்ச்சியிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், அப்போஸ்தலன் பவுலின் **தைரியமும், சகோதர சிநேகமும்**.

பொய்ப் பக்தியாளர்களின் மதவெறி உச்சத்தை அடைந்து, பவுலுக்கு வழித்துணையாக வந்த மக்கெதொனியராகிய காயுவையும், அரிஸ்தர்க்குவையும் ஒரு மனப்பட்டு இழுத்துக் கொண்டு அரங்க சாலைக்குள் பாய்ந்தோடினார்கள். இந்தக் **காயு**, அப்போஸ்தலனாகிய பவுலாலே கொரிந்து பட்டணத்தில் மனமாற்றப்பட்டவன் (I கொரி. 1;15) உயரிய பண்பாகிய உபசரிக்கும் பண்புக்கு இவன் சொந்தக்காரன் (ரோம. 16 ; 23) அரிஸ்தர்க்கு பவுலுடனே கூட ரோமச் சிறையில் இருந்தவன் (கொலோ. 4:10) இப்படிப்பட்ட சகோதரர்களின் உயிருக்கு ஆபத்து என்றவுடன் அவன் எப்படி துடியாய்த் துடித்திருப்பான் என்று பாருங்கள். அவர்களுடைய உயிருக்கு ஒன்றும் நேர்ந்துவிடக்கூடாது என்று அவர்களுக்காக, தேவனிடத்தில் எப்படி மன்றாடியிருப்பான் என்றும் எண்ணிப் பாருங்கள். புழுவாய்த் துடித்ததும், ஊக்கமாய் மன்றாடியதும் மாத்திரம்தானா அவன் செய்தது? இல்லை கூட்டத்துக்குள்ளே போகவும் முயற்சித்தான். அவர்களோடு சேர்ந்து தானும் பாடநுபவிப்பதற்கு தன்னை ஒப்புக் கொடுத்தான். அப்போஸ்தலன் பவுலின் இச்செயலை நாம் கவனிக்கும் போது, நமக்கு இரண்டு காரியங்கள் தெளிவாகிறது. முதலாவது அவன் தைரியமுள்ளவனாயிருந்தான் என்பது. இரண்டாவது சகோதரர்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருந்தான் என்பது. ஒருவேளை, நமக்கு இப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்குமானால் ஸ்கேவாவின் குமாரர் பாணியில் எல்லாவற்றையும் விட்டு ஓடியிருப்போம் அப்படித்தானே!

அன்பானவர்களே, இன்றைக்குக் கர்த்தருடைய பிள்ளைகள் எத்தனைபேரிடத்தில், அங்கே பவுலிடம் காணப்பட்ட தைரியமும், சகோதர சிநேகமும் உள்ளது. தேவனை மெய்யாய் நேசித்தவர்கள் தைரியமுள்ளவர்களாகவும் சகோதரர்களினிமித்தம் எதையும் செய்ய தயார் உள்ளவர்களாகவுமே இருந்துள்ளனர்.

புறச்சூழ்நிலை எதுவும் தங்களை பாதிக்க அவர்கள் அனுமதிப்பதில்லை. தாவீது சொல்லும் போது, உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன் என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் (II சாமு. 22;30) என்று கூறுகிறான். இந்த தைரியத்தை நாம் விலை கொடுத்தெல்லாம் வாங்க முடியாது. ஜெபத்தினாலும் (எபே. 6 ; 18,19) நீதியான வாழ்க்கையின் மூலமும் (நீதி. 28;1) பூரண அன்பினாலும் (I தீமோ. 4 ; 12) தேவனோடு ஒட்டி உறவாடுவதின் மூலமும் தான் (எபே. 4 ; 18) நாம் இதை அடையமுடியும். இப்படிப்பட்ட தைரியத்தை நாம் பெற்றுக் கொண்டால், அது மதமாற்ற தடைச் சட்டமாக இருந்தாலும், அது ஒரு வேளை, ஆராதனைத் தடைச் சட்டமாக இருந்தாலும் நம்மை ஒன்றும் செய்யாது.

அடுத்து பவுலின், சகோதர சிநேகத்திற்கு காரணம் அவர்களோடு அவனுக்கிருந்த தனிப்பட்ட பழக்கம் காரணம் என்று எண்ணுகிறீர்களா? ஒரு வேளை, அது காரணமே அல்ல என்று நாம் ஒதுக்கிவிடமுடியாது. ஆயினும் அதற்கும் மேலான காரணம் இருக்கிறதென்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். **சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்** என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் ( ரோமர். 12 ; 10) "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று **இயேசு ஆண்டவரும்** கட்டளையிட்டிருக்கிறார். மேலும், ஒருவர் மேலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று **ஆவியானவர்** மூலம் நாம் வசனத்தால் போதிக்கப்பட்டிருக்கிறோம் (I தெசலோ. 4 ; 9) பவுலடியாரின் அன்புக்கு இவைகள் தான் பிரதான காரணங்கள். **இடுக்கனில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்** என்று வசனம் ( நீதி. 17 : 17 ) சொல்லும் போது, அதற்கு மாறாக சகோதரர்களுக்கு இடுக்கண் செய்வதையே தங்கள் ஊழியமாக சிலபேர் கொண்டுள்ளனர். பிறருக்கு இடுக்கண் செய்யாவிட்டால் ஒருவேளை அவர்களுக்கு நித்திரை வராதோ! ஆனால் நாம் அப்படிப்பட்டவர்களாயிராமல், அப்போஸ்தலன் பவுலைப் போலிருப்போமாக.

## III. பவுலுக்கு தேவன் மீதான அபார நம்பிக்கை

எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்ற பவுலடியாரின் வார்த்தைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளுகின்ற இன்னுமொரு பாடம், தேவன் மீது நாம் எந்தச் சூழ்நிலையிலும் நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பது.

ஆசியாவில் தங்களுக்கு நேர்ந்ததைக் குறித்து கொரிந்தியருக்கு எழுதும்போது, ஆவியானவர் பயன்படுத்தின வார்த்தைகளைப் பாருங்கள். **...பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.** ( II கொரி 1:8,9) பவுலும் அவனோடிருந்தவர்களும், தேவன்

மீது எப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டிருந்தனர் என்று பாருங்கள்! பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் உண்டானபோதும், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போன நிலையிலும் தேவன் மீது நம்பிக்கை, அப்பப்பா! உங்களாலும், என்னாலும் இது முடியுமா? முடியும், எழுதியிருப்பதைப் படிக்க முடியும், சில நேரங்களில் பேச முடியும், ஆனால், அப்படியொரு சூழ்நிலை வந்தால்?!

அப்போஸ்தலன் பவுல், **தேவன் மீது நம்பிக்கையாயிருந்தோம்** என்று சொல்லாமல், **மரித்தோரை எழுப்புகிற தேவன்** என்று சொல்வதைத் தயவுசெய்து கவனிக்கத் தவறிவிடாதீர்கள். மரித்தாலும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் அவருக்கு எள்ளளவும், உயிருள்ளளவும் சந்தேகமிருந்ததில்லை. ஆகவேதான் கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்றும் (பிலி. 1:21). **கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்...**( எபி. 13:6) என்றும் சொல்லமுடிந்தது (எபிரேய ஆசிரியர் பவுலாகத்தான் இருக்கவேண்டுமென்று பொதுவாக நம்பப்படுகிறது).

இன்றைக்கு தேவன் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களில் அநேகர் துணிகரமாகப் பாவங்கள் செய்தவதற்கான காரணங்களில் ஒன்று, அவர் மரித்தோரை எழுப்புகிற தேவன் என்ற எண்ணம் இல்லாததே. ஆகவேதான், ஆனது ஆகட்டும் என்று எண்ணி சகட்டு மேனிக்கு தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். என்ன நடந்தாலும் மரணம் தானே எல்லையென்று நினைக்கிறார்கள். நம்முடைய தேவன் **மரித்தோரை எழுப்புகிற தேவன்** என்பது எல்லோருக்கும் எப்போதும் நினைவில் இருக்குமானால், பாவம் செய்ய நேரும் போது பயம் வரும். சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (II கொரி 5:10) என்று எண்ணத் தூண்டும். ஆகவே, நம்முடைய தேவன் மரித்தோரை எழுப்புகிற தேவன் என்ற எண்ணத்தோடு எப்போதும் வாழ வேண்டும்.

அப்படி நாம் வாழ்வோமானால், பாவச்சூழ்நிலைகளில் இருந்து நம்மை விலக்கிக் கொள்ளமுடியும். இப்படி பாவத்தை விலக்குவது தேவன் விரும்பும் பரிசுத்த வாழ்விற்கு அடிகோலும். பரிசுத்த வாழ்வு, பரலோக பாக்கியத்திற்கு பாதை வகுக்கும். அதற்குமேல் நமக்கு என்ன வேண்டும்?

ஆகையால் அருமையானவர்களே.. தார்...றார்.. பார் என்ற இந்த தலைப்பின் கீழாக நாம் கற்றுக்கொண்ட பாடங்களை மனதில் இருத்தி, அதற்கேற்ற வாழ்க்கையை நடத்துவோம். தேவ சமாதானம் உங்களுடன் இருப்பதாக! ஆமென்!!

**செ. ராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !

# காங்கயம் கிறிஸ்துவின் சபையார் நடத்தும் வேனிற்கால வேதாகம முகாம்

**மற்றும்**

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : **YMCA வளாகம்,** ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

நாள் : **மே மாதம் 5,6,7-2003** (திங், செவ், புதன்)

**சிறப்பம்சங்கள்**

- கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தலைசிறந்த ஊழியர்கள்.
- ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்
- கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.
- குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை
- பெண்களுக்கு தனி இடவசதி

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

பதிவுக் கட்டணம்

பெரியவர்கள் **ரூ. 100/-** சிறியவர்கள் **ரூ. 50/-** மட்டும்

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

Phone : 04257 - 230030 Cell : 98427 - 30382

*குறிப்பு : சுமார் 300 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

# கிறிஸ்துவின் சுவிசேஷம்

**நா**ம் கிறிஸ்துவின் சுவிசேஷம் பற்றி புதிய ஏற்பாட்டில் அநேக முறை வாசிப்பதுண்டு. மற்றவர்களும் அதைக் குறித்து நம்மிடம் பேசுவதை கேட்கவும் செய்வதுண்டு. அநேக சமயங்களில் நாம் சுவிசேஷத்தை பலவிதமாகக் குறிப்பிடுகிறோம். ஆனால், சுவிசேஷம் என்றால் என்ன? கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றால் என்ன? அதற்கான பதிலைப் பெறும்படியாக நாம் வேதாகமத்தை நாடுவோம். பவுல் எழுதுகிறதாவது, "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை. எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே" (ரோமர். 10 ; 11-15).

நாம் கவனித்த இந்த வசனத்தின் அடிப்படையில், "சுவிசேஷம்" என்ற வார்த்தைக்கு நற்செய்தி, நற்காரியம், இரட்சிப்பு, சத்தியம், வார்த்தை ; வாக்குத்தத்தம், நம்பிக்கை என்று பல பொருளைக் காணலாம். மற்றெல்லா செய்திகளைப் பார்க்கிலும் இது பிரித்தெடுக்கப்பட்டதாகவும், வித்தியாசமானதாகவும், கிறிஸ்துவின் நற்செய்தியைக் குறிக்கிறதாகவும் இருக்கிறது.

இந்த **நற்செய்தியானது** இயேசு கிறிஸ்துவினுடைய **மரணத்தையும், அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் அடிப்படையாகக் கொண்டது.** அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதுகையில், "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு, நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள்

அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்" (I கொரி. 15 : 1-4). என்றார். ஆனால், **கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலை நாம் எப்படி நற்செய்தி என்று கூறுகிறோம்**? ஏனென்றால் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் மூலம்தான் ஒருவன் இரட்சிப்படைந்து, நித்திய ஜீவனின் நம்பிக்கையை பெற முடியும். ஆகவே தான் மனித குலத்திற்கு இது நற்செய்தியாகத் திகழ்கிறது. பவுல் ரோமர்களுக்கு எழுதுகையில் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் ; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோமர். 1 ; 16, 17) என்கிறார்.

நம்முடைய அனுதின வாழ்க்கையில் நற்செய்தி என்றால் என்ன என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிந்திருப்போம். நாம் ஒரு ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளும் போது, மகிழ்ச்சியால் நிறைந்து எல்லோரோடும் அதை பகிர்ந்து கொள்ள ஆசைப்படுவோம். இது இயல்பான ஒன்றாக இருக்கிறது. அதைப் போலவே கிறிஸ்துவின் மூலமாக நாம் இரட்சிப்பை பெற்றிருக்கிற நற்செய்தியும் இருப்பது உண்மைதான். நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிவதன் மூலமாக, அவருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருந்தால், நாம் அதை உலகம் முழுவதும் சொல்ல ஆசைப்பட வேண்டும். ஆகவேதான், கிறிஸ்து சொன்னார். **பின்பு, அவர் அவர்களை நோக்கி ; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** (மாற்கு. 16 ; 15, 16). என்று.

வேதாகமம் தேவனின் சுவிசேஷத்தைக் குறித்துப் பேசுகிறது. "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப்

பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல், ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது ; நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. இயேசு கிறிஸ்துவைக் குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும், தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு, எங்களுக்கு கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச் செய்திருக்கிறார்" (ரோமர். 1 ; 1-7) என்கிறார்.

தேவனின் கிருபையுள்ள சுவிசேஷத்தைக் குறித்து அதை பவுல் கூறுகையில் "ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய **கிருபையின் சுவிசேஷத்தைப்** பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப். 20 ; 24) என்கிறார். இந்த வசனங்கள் கிறிஸ்துவுக்கும், தேவனுக்குமிடையே இருக்கும் ஒற்றுமையை நமக்குக் காட்டுகிறது. இந்த உலகத்திற்கு சுவிசேஷத்தைக் கொடுக்கும்படியே கிறிஸ்துவை தேவன் அனுப்பினார். ஆகவேதான் வேதம் அதை கிறிஸ்துவின் சுவிசேஷம் அல்லது தேவனின் சுவிசேஷம் என்று அழைக்கிறது.

அந்த மகிமையான சுவிசேஷத்தைக் குறித்து நாம் வாசிக்கையில், "நித்தியானந்த தேவனுடைய **மகிமையான சுவிசேஷத்தின்படி** எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது" (1. தீமோ. 1;11). மீண்டுமாக நாம் கவனிக்கையில், "எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய

சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." சுவிசேஷம் மகிமையானதாக சொல்லப்பட்டிருக்கிறது அது பரலோகத்திற்குரியது, நித்தியமானது என்று பொருள். ஏன் என்றால் அது தேவனிடத்திலிருந்தும், கிறிஸ்துவினிடத்திலிருந்தும் புறப்பட்டு வந்தது.

மத்தேயு, மாற்கு. லூக்கா, யோவான், ஆகிய நூல்களில் , "ராஜ்யத்தின் சுவிசேஷம்" என்கிற வார்த்தைகள் அநேக முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, **ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப்** பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (மத். 9 : 35). "யோவான் காவலில் வைக்கப்பட்டபின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்" (மாற்கு. 1 : 14, 15). அந்த கால கட்டத்தில் வரப்போகிற ராஜ்யத்தைக் குறித்து, கிறிஸ்துவும் மற்றவர்களும் போதித்தார்கள், வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், ராஜ்யம் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை, அது சீக்கிரமாக ஏற்படும் என்று சொன்னார்கள் என்றும் சொல்லலாம். அதற்குப் பின்பாக, கர்த்தருடைய மரணம் அடக்கம் உயிர்தெழுதல் இவைகளை மையமாக வைத்து சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அது கட்டளையிடுகிற எல்லாவற்றிற்கும் தங்களை கீழ்ப்படுத்தியவர்களை கர்த்தர் தமது சபையிலே அல்லது ராஜ்யத்திலே சேர்த்துக் கொண்டு வந்தார். (அப். 2 : 47).

இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் குறித்தும் நாம் வாசிக்கிறோம். எபேசியருக்கு எழுதுகையில் நீங்களும் **உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய** சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் (எபே.1 : 13) என்கிறார் பவுல். சுவிசேஷம் தான் இரட்சிப்பைக் கொண்டு வருகிறது. சில நேரங்களில் இரட்சிப்பதற்காக சுவிசேஷத்தின் திட்டம் என்று சொல்கிறோம். அதற்கு மனிதனை இரட்சிக்க தேவனுடைய திட்டம் என்று பொருள்.

அடுத்ததாக, **சமாதானத்தின் சுவிசேஷம்** என்கிறோம். "அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே" (ரோமர். 10 ; 15). மீண்டும் நாம் சிந்திக்கையில், "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாவும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்". (எபே. 6 ; 14 - 16). சுவிசேஷம் சமாதானத்தைக் கொண்டு வருகிறது. மனதில் சமாதானம், ஆத்துமாவில் சமாதானம், சகமனிதர்களிடத்தில் சமாதானம், கிறிஸ்து சமாதானத்தின் மனிதராக திகழ்ந்தார். ஆகவே அவருடைய சுவிசேஷமும் அவர் அனுபவித்த சமாதானத்தையே நமக்குத் தருகிறது. தேவ சமாதானம் தான் அது. நிச்சயமாக இது நற்செய்தி தானே!

இறுதியாக இதை **நம்பிக்கையின் சுவிசேஷம்** என்றும் அழைக்கிறது. "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும், பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நீங்கள் கேட்ட **சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை** விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாகவும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது ; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலே. 1: 21 - 23). சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதினால் ஒருவனுக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை பிறக்கிறது. இதைத்தான் நாம் கண்ட வசனத்தில் வாசிக்கிறோம். நமக்கு நம்பிக்கை வேறு எந்த வழியிலும் வருவதில்லை.

அடிக்கடி பவுல், "என் சுவிசேஷம்" அல்லது "நம் சுவிசேஷம்" என்று குறிப்பிடுகிறார். இப்படி சொல்லும் போது அவர் என்ன அர்த்தம் கொள்கிறார்? தானும் மற்றவர்களும், கர்த்தரிடத்திலிருந்து பிறருக்கு பிரசங்கிக்கும்படி பெற்றுக் கொண்டதையே அவர் அப்படிக் கூறுகிறார்"

"எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடமோத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோதே உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே". (1. தெச.1 ; 5). இங்கேயும், ரோமர் 1 ; 16லும் வாசிக்கிறது போல, விசுவாசிக்கிறவர்களை இரட்சிப்பதற்கு அது தேவ பெலனாக இருக்கிறது.

வேத வசனத்தின்படி இதுதான் சுவிசேஷம். இது எளிமையானதுதான், ஆனாலும் வல்லமையானது. இது எல்லா காலத்திற்கும் பொருந்தக் கூடியதாகவும், கிறிஸ்துவைப் போலவே நித்திய தன்மையுடையதாகவும் இருக்கிறது. இது நம்மை இரட்சிக்கிறது. நமக்கு நம்பிக்கை கொடுக்கிறது. ஒரே சுவிசேஷம்தான் உண்டு. அது எல்லாரிடத்திலும் பிரசங்கிக்கப்படவேண்டும். இது கிறிஸ்து மற்றும் தேவனுடையது. ஆகவே மகிமையானது. அது நம்மை ஆசீர்வதிக்கிறது. நமக்கு சவால் விடுகிறது. பொறுப்புகளை தருகிறது. இது ஒவ்வொரு தனி நபருக்கும், மொத்தத்தில் எல்லாருக்கும் நன்மை தரக் கூடியது. நிச்சயமாகவே இது நற்செய்திதான்.

**J.C. Choate** **J.C. சோட்.**

## மற்றுமொரு வாய்ப்பு

நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி? என்ற நூல், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27,

காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

# நானும் என் வீட்டாருமோ வென்றால்...



இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை மறந்து தன் தன் மனம் போன போக்கில் போய்க் கொண்டிருந்த சூழ்நிலையில் யோசுவா தன்னுடைய குடும்பத்தாரின் விசுவாச உறுதிக்கு உத்திரவாதம் அளித்து **நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்** என்றான். (யோசு. 24 : 15) நோவா கூட உலகமெல்லாம் தன் செயல்முறைகளை இகழ்ந்தும் பழித்தும் கூறியும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் தன் குடும்பத்தாரை விசுவாசத்திலிருந்து வழுவிப் போகா வண்ணம் காத்துக் கொண்டான். (1 பேது 3:20, 2 பேது 2 : 5) ஆனால் தற்காலத்தில் குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ளாமல் ஆண்கள் மட்டும் வந்து போவது கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் தவறான பழக்க வழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. அதுவும் ஆராதனைக் கூடங்கள் சற்று தூரமாக இருந்து விட்டால் அதையே ஒரு காரணமாக்கி விடுவர். போதிய பஸ் வசதி இல்லை - குழந்தைகளை இழுத்துக் கொண்டு வந்து சேர்வதற்குள் பெரும் பாடாய்ப் போய் விடுகிறது. - அப்படித் தான் அவர்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும் என்ன, அவர்களுக்கு பிரசங்கங்களும், இதர சபை நடவடிக்கைகளும் விளங்கவா போகிறது? - ஆகவே தான் அவர் மட்டும் வந்து விட்டு வரட்டும், பிள்ளைகள் பெரிதான பிறகு நாங்கள் வருகிறோம் என்று தாய்மார்களும் தப்பித்துக் கொள்கின்றனர்.

இந்த மாதிரி பழக்கத்தால் ஏற்படும் விளைவுகள் என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (1) ஆண்கள் மட்டும் போய் ஆராதித்து வருவதினால் முழுக் குடும்பமும் கிறிஸ்துவுக்குள் வளர முடியுமா? (2) பிள்ளைகளுடைய வேத அறிவு வளர்ச்சியடையுமா? (3) அவர்கள் சபை நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் அவர்களுடைய விசுவாசம் உறுதியாக இருக்குமா? (4) அங்கே ஆராதனைக்காக கூடிவரும் மற்ற சகோதர சகோதரிகளை மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் பார்க்காமலே இருந்தால் அவர்கள் மீது இவர்களுக்கு அன்பு சுரக்குமா? (5) ஒற்றுமை உணர்வு உருவாகுமா? (6) சிறு பிள்ளைகளுக்கான ஞாயிறு பள்ளி

ஒழுங்காக நடந்து அவர்கள் வேத அறிவைப் பெற்றுக் கொள்ள முடியுமா? (7) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? சிறு பிள்ளைகளாக இருக்கும்பொழுது அவர்களுக்கு நற்பழக்கங்களையும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தையும் கற்றுத் தராமல் போனால் வளர்ந்து, ஆள் ஆகும் போது அவர்களை நல்வழிப்படுத்துவது சிரமம் இல்லையா?

சகோதரிகளே! கணவன் மாத்திரம் ஆராதனையில் கலந்து கொண்டு நாமும், குழந்தைகளும், வீட்டிலேயே இருந்து விட்டால் நாம் விசுவாசத்தை விட்டு வழுவி விழுந்து போக மாட்டோமா? இந்தத் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தால் அல்லவா, நமக்கு பின் வருகிற பிற்காலச் சந்ததிகள் விசுவாசத்தில் வளர்வதற்கு வாய்ப்பாகவே இருக்கும்? நாம் நம்முடைய குழந்தைகள் விசுவாசத்தில் வளர்வதற்கேற்ற சூழலை அமைத்துத் தரா விட்டால் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாகி விடுவார்களே! இந்த அபாயங்களை நாம் உணர்ந்து அவர்கள் விசுவாச ஜீவியத்தில் வளர்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பெண்களுக்கும் ஆத்துமா உண்டு. ஆகவே அவர்களும் தேவனைத் தொழுவது அவசியம். ஆசீர்வாதத்தை பார்சலில் அனுப்ப முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் வழி நடத்தப்படவும், உற்சாகப்படுத்தப்படவும் வேண்டும். அவர்கள் சபையில் உள்ள மற்ற சகோதரிகளை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளமுடியும். சபையால் நடத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டு, ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று தேவனுக்குப் பிரியமாய் நடக்க வேண்டும்.

ஒரு வேளை பெரியவர்களைப் போல குழந்தைகள் சொல்லப்படுகிற காரியங்களைத் தெளிவாக புரிந்து கொள்ளாமல் போகலாம், அதற்காகத் தானே ஞாயிறு பள்ளி, அதில் அவர்களுடைய வயதுக்கும், மனப்பக்குவத்துக்கும் ஏற்ற முறையில் தேவனுடைய வார்த்தைகளைக் கற்பிக்கலாமே!. அதனால் தான் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு கூட்டத்திற்கும் அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். அப்படிச் செய்தால் அவர்கள் நன்கு பயிற்சி பெற்று

கர்த்தருடைய வசனத்தின் அறிவில் வளர்ச்சியடைவார்கள். பெண்கள், குழந்தைகளும் பொதுவாக ஆராதனைக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருவதோடு மட்டுமல்லாது, வீட்டிலேயும் பிள்ளைகளுக்கு காலை, மாலை ஜெபங்கள் வேதபாடப் பயிற்சி ஆகியவைகளை ஒழுங்காகக் கற்றுத் தர வேண்டும். ஏனெனில் வாரத்தில் ஒரு நாள் இரண்டொரு மணி நேரம் ஆராதனையில் நாம் கற்றுக் கொள்கிற கொஞ்ச காரியம் வாரம் ஏழு நாட்கள் முழுவதுக்கும் போதாது. எனவே வீட்டிலும் நாள்தோறும் சிறிது நேரத்தை ஒதுக்கி குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய விசுவாச ஜீவன் பலப்படும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சிறார்களுக்கு நித்திய ஜீவனை அடைவதற்கான காரியங்களில் பயிற்சி கொடுக்கத் தவறி விட்டு, சொற்ப காலத்தில் அழிந்து போகிற சரீரப் பிரகாரமான நன்மைகளைத் தரும் உயர்ந்த கல்வி, சேர்த்து வைக்கும் சொத்து, கட்டி வைக்கும் பங்களாக்கள், தூசும், குப்பையும் தான். அவைகள் அவர்களுக்கு சிறப்பையும், ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் பெற்றுத் தராது. **ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல** என்றும் (லூக் 12 : 15 ) ஒருவன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மத் 16 ; 26) என்றும் திருமறை கூறும் பேருண்மைகளைச் சிந்தித்து பார்ப்பீர்.

**ரேச்சல்நாயகம்** **B.B. CHOATE**

## ஏவாள்

இத்தரணியில் படைக்கப்பட்ட முதல் 'தாய்க் குலம்' ஏவாள். இச்சையடக்கமற்ற அவளது விநோதப் பிரியத்தால் பாவம் ஆதாம் வழியாக உற்பத்தியாகி, அதன் தீய விளைவை மனுக்குலம் இன்றும் அனுபவிக்கிறது.

சகோதரிகளே! கீழ்ப்படிதலற்ற விநோதப் பிரியத்தால் நம் குடும்பங்களில் நாம் விதைத்திடும் வினைகள் எத்தனை! சிந்திப்பீர்.

# கலாத்தியர் ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : பவுல்**
**காலம் : சுமார் 55 அல்லது 56 கி.பி.**

## இந்நூல் பற்றி...

1. யூத மார்க்கத்தார் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்டினார்கள் (கலா. 1 ; 6-9) ஆகவே அதை கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதியிருக்கிறார்.
2. மாம்ச விருத்தசேதனம் ஒன்றுக்கும் உதவாது என்று ஆணித்தரமாக எழுதுகிறார் (கலா. 5 ; 6).
3. கலாத்திய நாட்டு சபை யூதர்கள் மற்றும் புறஜாதிகளால் நிறைந்திருந்தது. ஆனால், புறஜாதிகள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள் (அப். 13; 14, 42-48, 14; 1,2).
4. இப்புத்தகத்தை "கிறிஸ்தவ விசுவாசத்தின் உரிமை சாசனம்" என்று அறிஞர்கள் அழைக்கிறார்கள்.
5. யூத மார்க்கத்தார் பவுலின் அப்போஸ்தலத்துவத்தை மறுத்தனர் (கலா. 1 ; 10 கலா. 2 ; 21).
6. மோசே மூலமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமணாத்திற்கு இரண்டு நோக்கமிருப்பதாக இந்நூலில் சொல்லப்பட்டுள்ளது.

அ). அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டது ( கலாத்தியர். 5 ; 4).

ஆ) கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாயிருக்கிறது (கலா. 3 ; 24).

## இந்நூலின் செய்தி ...

அ. கிருபையிலிருந்து ஒரு கிறிஸ்தவன் விழுந்து போக முடியும் (கலா. 5 ; 4).

ஆ. கிறிஸ்தவர்கள் ஆவியின் கனிகளைத் தரவேண்டும் (கலா.5; 22-25).

இ. சத்தியத்தை சொல்லுகிறவர்கள் நமக்கு எதிராளிகளல்ல; மாறாக அவர்கள் தான் நமக்கு சிறந்த நண்பர்கள் (*கலா.4; 16).

ஈ. நாம் செய்யும் ஒரு பாவம் மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். பேதுரு செய்தது பர்னபாவையும் இழுத்தது (கலா. 2:13).

# மாயை, மாயை, வாலிபமும் மாயை

என் இனிய வாலிப சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவரையும் தித்திக்கும் திருமறை ஆசான் வாயிலாக சந்திப்பதில் உள்ளார்ந்த மகிழ்ச்சி கொள்ளுகிறேன்.

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக் கூறி தொடருகிறேன்.

மாயை, மாயை, எல்லாம் மாயை, (பிர. 1 : 2) ஞானி சாலமோன், மாயை, மாயை என்று எதையும் கூறாமல், யாரையும் சொல்லாமல், அது இது என்று எதையும் குறிப்பிடாமல் **எல்லாம் மாயை** என்று சொல்லுகிறார். அப்படியானால், இந்த மாயையிலே என் அறிவுக்கும் நினைவுக்கும் எட்டின சில காரியங்களை காணலாம். முதலாவது, நாம் எல்லோரும் இந்த பூவுலகில் பூத்த மலர்கள். ஆனால், இந்த பூவுலகே மாயை, நம்முடைய வாழ்க்கை மாயை; பருவங்கள் மாயை, சிந்தனையும், எண்ணங்களும் மாயை, ரசிப்பதும், ருசிப்பதும், இச்சிப்பதும் மாயை, இன்பமும் துன்பமும் ஆகிய, கனவும், நினைவும் மாயை, சிரிப்பதும் அழுவதும் மாயை, இளவயதும் வாலிபமும் மாயை, கண்கள் காண்பதும் செவிகள் கேட்பதும் மாயை. இவைகளில் இளவயதும் வாலிபமும் மாயை என்பதை அறிய நம்முடைய சிந்தனையைத் தொடருவோம்.

## வாலிபம் உன் வாழ்வின் எதிரொலி :-

என் அன்பு வாலிப சகோதர, சகோதரிகளே, இந்த வாலிப பருவத்திலே நீங்கள் எதிரொலி என்பதை எதிர்நோக்காதவர்களாக இருக்கலாம். அல்லது அது உங்கள் இதயத்திற்கு எட்டாத ஒரு புதிராக இருக்கலாம். ஆனாலும் நீங்கள் நிச்சயமாக அறிந்து கொள்ள வேண்டிய காரியங்கள் அநேகம் உண்டு. தயவு செய்து கவனியுங்கள். வாலிபம் உன் வாழ்வின் விதை! அது எப்படிப்பட்ட விதை என்பதை உன் கிரியை வெளிப்படுத்தும். அதன் விளைவு அது இனிய கனியா, கசப்பான கனியா என்பது வயோதிக நாட்களில் அது திட்டமாக வெளிப்படும். இன்று அநேக வயோதிகர்கள் தங்கள் வாழ்க்கையின் கசப்பை எண்ணி, எண்ணி, புலம்புகிறார்கள். திரும்பிப் பார்த்தால் தெரிவதென்னவோ வாலிப நாட்களே, இன்றைய வாலிபர்கள் இனிய நாட்களாய் இன்றைய நாட்களை அநுபவிக்கிறோம். அன்றைய வாலிபர்கள் இன்றைய நாளிலே அன்றைய நாட்களைக் குறித்து கசப்பாகவும், வெட்கமாகவும் எண்ணுகிறார்களே, காரணம் என்ன? அதுதான் வாலிபத்தின் கசப்பான எதிரொலி, இவர்களெல்லாரும் மனம்போன போக்கிலே போய் மனசும் மாம்சமும் விரும்பினவைகளைச்

செய்து உணர்வுக்கும், உலகிற்கும் அடிமைப்பட்டவர்கள். தாய், தந்தையை மதியாதவர்கள், நீதியையும் தர்மத்தையும் எதிர்த்தவர்கள், இப்பொழுது, நிலைதடுமாறி நிம்மதியும் சமாதானமுமின்றி தவிக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அதுதான் வாலிபத்தின் எதிரொலி! வயோதிகத்தில் இப்படிப்பட்ட நிலை இருக்குமானால் யார் இதை பிரியமான நாட்களாக ஏற்றுக் கொள்ள முடியும் ( பிர. 12 : 1).

அர்த்தமற்ற உன் பார்வைக்கும், காரணமில்லா உன் சிரிப்பிற்கும் காரணம் உன் வாலிபம் தானே! இந்த வாலிப நாட்களிலே நாம் தேவனை தேடி அவரை பிரியப்படுத்தி வாழ்கின்ற போது, அதின் எதிரொலியே இனிமையாது. வேதத்தில் தேவனுக்கு பயந்து வாழ்ந்த எத்தனையோ வாலிபர்களை பார்க்கிறோம். அவர்களில் இரண்டு பேரை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஈசாக்கு, யோசேப்பு, இவர்கள் வாலிபத்தின் இச்சைகளுக்கும், உலக சந்தோஷங்களுக்கும், தங்கள் மாம்சத்தையும், மனதையும் ஈடுபடுத்தாதவர்கள். இவர்களுடைய வாலிபத்தின் எதிரொலி என்ன? தேவனால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டார்கள். இவர்கள் வாலிபத்தின் நாட்களை கசப்பானதாகக் கழித்தனர். ஆனால், வயோதிகத்திலோ இனிமையாகவும், சமாதானமாகவும் வாழ்ந்தனர். அர்த்தமற்ற பார்வை, காரணமில்லாத சிரிப்பு, பின்னாளிலே சஞ்சலத்தை வருவிக்கும். நீ சஞ்சலத்தையும் தீங்கையும் விட்டு விலகவேண்டுமானால், நீ உன் வாலிபத்திலே தேவனை நினை. (பிரசங்கி. 11 ; 9, 10 பிர. 12 ; 1). வாலிபத்திலே நீ செய்யும் ஒவ்வொரு செயலும் வயோதிகத்திலே எதிரொலிக்கும் என்பதை உன் இதயத்திற்கு நினைப்பூட்டு, தேவ பயமில்லா வாலிபம் உன் எதிர்காலத்தில் புலம்பலையும், அழுகையையும் வருவிக்கும் என்பதை அறிந்து கொள்.

**வாலிபம் உன் வாழ்வின் எதிராளி**

பிரியமானவர்களே, நான் வாலிபத்தை இப்படிக் குறிப்பிடுவதினாலே வாலிபராகிய உங்களுக்கு நான் எதிராளியல்ல. நம்முடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடைகளாய் பலரை நினைக்கிறோம். பல காரியங்களை குறிப்பிடுகிறோம். ஆனால் உனக்கு நீயே எதிராளி என்பதை நீ அறிய மறுக்கிறாய், உனக்கு நீயே எதிராளி என்பதை என்று நீ உணருகிறாயோ அன்றே நீ ஜாக்கிரதையாகிவிடலாம். உன் வாழ்க்கை உன் கையில் என்ற கருத்தை மனதில் வைத்துக் கொண்டு மனம் போன போக்கில் அநேகர் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை, தன்னம்பிக்கை வளர்க்கும் வார்த்தையாக அது இருக்கலாம். ஆனால், தேவபயமில்லாத தன்னம்பிக்கை ஒரு போதும் ஆசீர்வாதத்தை கொண்டு வந்து சேர்க்காது.

ஆகவே, தேவ பயமில்லாத தன்னம்பிக்கையும், சுயபுத்தியும், மனம் போன போக்கும் உன் வாழ்வின் எதிராளி என்பதை அறி. (நீதி. 3 : 5). இதை அறிந்து கொண்டு கர்த்தரில் நம்பிக்கையாயிரு.


இந்த வாலிப நாட்களில் புத்திமதியை கேட்பதும், ஏற்பதும் வேடிக்கையாகவும் சொல்பவரை ஏளனமாகப் பார்க்கத் தோன்றும். இவைகளெல்லாம் உன் வாழ்வின் எதிராளி. பிரியமானவர்களே! எது உங்கள் இதயத்தை ஈர்க்கிறதோ, அதின் பக்கம் சாயும் நேரமிது, அது நன்மையானதாயும் இருக்கலாம், தீமையானதாயும் இருக்கலாம், அதின் எதிரொலி சமாதானமாகவும் இருக்கலாம் அல்லது சஞ்சலமாகவும் இருக்கலாம்.

பாருங்கள் பிரியமானவர்களே! இன்று அநேக தீவிரவாத இயக்கங்கள் மற்றும் அநேக தீவிரவாதிகளும் இருக்கின்றனர். இவர்களெல்லாரும் வாலிபத்தில் தாங்கள் செய்வதும் நினைப்பதும் இன்னதென்று அறியாமல் அதில் சேர்ந்தனர். இன்று வாழ்வா, சாவா என்று போராடுகின்றனர். இனி சமாதானமும் அமைதியும் கனவிலும் கூட அவர்களுக்கு கிடையாது. இப்படிப்பட்ட நிலைக்கு யார் காரணம்? உன் இளமையிலேயே நிதானிக்காதததுதான் காரணம். இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நீ தள்ளப்படுவாயானால், வாலிபம் உன் வாழ்வின் எதிராளி என்பதை நிச்சயமாக அறியமுடியும். பலவிதமான கனவுகள் காணும் உங்கள் நெஞ்சங்களை கர்த்தரில் நம்பிக்கை வைத்து அமர்ந்திருக்கச் செய்யுங்கள். அப்பொழுது நிம்மதியும், சமாதானத்தையும் காணமுடியும். (நீதி. 3 ; 26).

மாயை, மாயை என்று எல்லாவற்றையும் காண்பித்த ஞானி சாலமோன் இளவயதையும், வாலிபத்தையும் மட்டும் அந்த பகுதியிலே குறிப்பிடாமல் இளவயதையும், வாலிபத்தையும் மட்டும் தனியே அதே அடைமொழியிட்டு எச்சரிக்கிறார் என்றால் வாலிபம் எவ்வளவு நிலையற்றது. வாலிபம் மாயையிலும் மாயை என்றால் நிச்சயமாகத் தவறில்லை. (பிர. 12 ; 7) மாயையிலே தொடங்கி, அதே மாயையிலே முடிக்கிறார் ஞானி சாலமோன். பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே இடையே நடக்கின்ற அனைத்துக் காரியங்களும் மாயை. ஆனால், தேவனுக்குப் பயப்படும் பயம் மட்டும் நித்தியத்தை நமக்கு கொண்டு வரும். ஆகவே, தேவனுக்கு பயப்படுவது நம் மேல் விழுந்த கடமை. அது வேதனையில்லாத ஆசீர்வாதத்தை, நிம்மதியான வாழ்க்கையை கொண்டு வரும். இந்த வாழ்க்கை பெற்றுக் கொள்ள தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

**க. சேகர்**
திருப்பூர்

# செவி கொடுக்கும் தேவன்



கிறிஸ்துவுக்குள் என் அன்புக்குரிய தம்பி, தங்கைகளே, உங்கள் யாவருக்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் ஒவ்வொருவரும் முழுஆண்டு தேர்வுக்காக நம்மை இந்நாட்களில் ஆயத்தமாக்கிக் கொண்டிருப்போம் என நம்புகிறேன். ஆகவே உங்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும் பொருட்டு இக்கட்டுரையை எழுதியிருக்கிறேன். என்னோடு சேர்ந்து, தயவுசெய்து, கவனமாகப் படியுங்கள்.

மெத்தையில் விழுந்த ஏஞ்சலின் ஒரு பெருமூச்சு விட்டாள். அறைக்குள் வந்த அவள் அம்மா, பள்ளியில் இன்று உனது நாள் நன்றாக அமையவில்லையா என்ற அரவணைப்போடு கேட்டாள். நன்றாக அமையவில்லை என்று சொல்லாதீர்கள். மிகவும் மோசமாக இருந்தது, எனக்கு அங்கு போகவே எனக்கு பிடிக்கவில்லை என்று ஏஞ்சலின் வெறுப்புடன் கூறினாள். அதைக் கேட்ட அம்மா, பள்ளியில் அப்படி என்னதான் நடந்தது? என்று சொல்லேன் என்றாள்.

சரி, அப்படி ஒன்றும் பெரிதாக நடந்துவிடவில்லை என்பது ஏஞ்சலின் விளக்கம். என் புது பள்ளியில் ஒருவரையும் எனக்குத் தெரியவில்லை. அது தான் பிரச்சினை, நான் சேர்ந்துள்ள பள்ளியில் சென்ற வருடமே அநேகர் படித்திருப்பதால், ஒருவரையொருவர் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஆனால் எனக்கோ புது நண்பர்களை கண்டுபிடிப்பது மிகவும் கடினமாயுள்ளது.

நீ என்ன சொல்ல வருகிறாய் என்று நன்றாக புரிகிறது. நானும் உன் தந்தையும் இதைக் குறித்து பேசினோம். போகப் போக உனக்கு இது பழகிவிடும் என்றாள்.

என்ன செய்வதென்றே எனக்கு புரியவில்லை என்று கூறினாள் ஏஞ்சலின். கவலைப்படாதே ஏஞ்சலின், நம் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் படியாகவே பரலோகத்தின் தேவன் வேதாகமத்தை நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். நேற்றிரவு நான் ஏசாயாவின் தீர்க்க தரிசின புத்தகத்தை படித்தேன் அதில் யூதர்கள் அடிமைகளாக, அவர்களுக்குப் பழக்கமில்லாத பாபிலோன் தேசத்திற்கு போனார்கள். அங்கு அவர்கள் தனிமையில் வாடுவதாக எண்ணினார்கள். தேவன் அவர்களுக்கு செவி கொடுக்கவில்லை என்றும் நினைத்தார்கள்.

இப்போது தனிமை என்ன என்பதை நானும் உணர்கிறேன் என்று ஏஞ்சலின் கூறினாள். ஆனால் அம்மாவோ, ஏசாயா தீர்க்கன் சொல்வதை தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள். தேவன் எப்படிப்பட்டவர் என்று ஏசாயா யூதர்களுக்கு விளக்குகிறார். நமது தேவன் விக்கிரகங்களைப் போல செவிகொடாத தேவன் அல்ல. **அவர் நமது ஜெபத்திற்கு பலன் கொடுப்பதில் சோர்ந்து போகிறவரும் அல்ல.** (ஏசா. 40 : 27, 31).

என் அன்பு மகள் ஏஞ்சலினே, தேவனிடத்திலே உன் பிரச்சினைகளை சொல்லி ஜெபி என்று கூறினார்கள். அத்தோடு, அதை நீ செய்வாயானால் உன் ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பார் என்றும் கூறினாள்.

ஏஞ்சலினின் முதுகை அன்போடு தட்டிக்கொடுத்து விட்டு அடுப்படிக்குள் சென்றாள். அம்மா சென்ற பின் ஏஞ்சலின் முழங்காலிட்டு தேவனை நோக்கி, தேவனே, பள்ளியில் நான் தனிமையில் தவிக்கிறேனே! எனக்கு இரங்கும்! என் பிரச்சினையை நீக்கும் என்று இயேசுவின் மூலம் கெஞ்சி ஜெபித்தாள். அவள் ஜெபித்த பின்பு மிகவும் நன்றாக இருப்பதாக உணர்ந்தாள். புன்னகை அவள் முகத்தில் மலர்ந்தது. தேவன் அவள் ஜெபத்திற்கு செவிகொடுத்ததாகவே எண்ணினாள்.

நாமும் நம்முடைய பிரச்சினைகளை தேவனுக்கு தெரியப்படுத்துவோம். தேவன் நமது ஜெபத்திற்கு நிச்சயம் செவி கொடுப்பார். பரத்திலிருந்து சிறுபிள்ளைகளாகிய நமக்கு ஞானம் தருவார். அப்பொழுது நம்முடைய தேர்வை நாம் பயமில்லாமல் சந்திக்க முடியும். வெற்றியும் கிடைக்கும். எதிர்காலம் ஆசீர்வாதமாக அமையும்.

R. Abel Rodger Nayagam

# ஆதித் திருச்சபையை மீட்டமைக்க நாடுவோம்

உலகமெங்குமுள்ள கிறிஸ்துவின் சபை, புதிய ஏற்பாட்டு, உண்மைக் கிறிஸ்தவத்தை மீட்டமைக்க வேண்டுமென மிகவும் பிரயாசப்படுகிறது. ஒருவேளை நீங்கள் கேட்கலாம். "நீங்கள் சொல்ல வருவதின் அர்த்தம் என்ன? என்று. இந்த கேள்விக்கு நாம் ஒரு தெளிவான பதிலை தெரிந்து கொள்ளுவது அவசியமானது.

மீட்டமைத்தல் (Restore) என்கிற வார்த்தைக்கு "பழைய நிலைக்கு அல்லது முந்தைய, உண்மையான நிலைக்கு மீண்டும் ஒன்றைக் கொண்டு வருதல் என்ற பொருளை (வெப்ஸ்டர்) ஆங்கில அகராதி தருகிறது. கிறிஸ்தவத்திற்கு நாம் இதை பயன்படுத்தினால், நாம் அதை பழைய நிலைக்கு, ஆதி நிலைக்கு கொண்டு வர முயற்சிக்கிறோம் என்று பொருள். நாம் இப்படி சொல்லும்போது, சபைக்கு இதற்கு முந்திய நாட்களில் பின்னடைவு ஏற்பட்டது என்பது உண்மை. ஆனாலும் அது முற்றிலும் அழிந்து போகவில்லை. புதிய ஏற்பாட்டை நாம் கவனமாக வாசிக்கையில், கத்தோலிக்க, புராட்டஸ்டண்டு சபைகளுக்கும், நாம் வாசிப்பதற்கும் அதிக வித்தியாசம் இருப்பதைக் கண்டிப்பாக காண முடியும். கிறிஸ்தவத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் மனிதன் தனக்கு பிடித்த விதத்தில் மாற்றியிருக்கிறான் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

**இதோ சில மாற்றங்கள்...**

சபையின் ஆளுகை அமைப்பு, ஒவ்வொரு பிராந்திய சபையிலும் தனித்தனியே இயங்கி, மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்பவர்களால் வழி நடத்தப்படுவதிலிருந்து, உலகத்திலுள்ள சபைகளை ஒருவர் கட்டுப்படுத்துவது, பல சபைகளை ஒரு வட்டமாக பிரித்து, அதில் ஒருவரைத் தெரிந்து எடுத்து அவரை தலைவராக கொள்வது என்று மாற்றப்பட்டிருக்கிறது (எபே.1 ; 22, பிலி. 1;1).

சபையின் பெயர் வேதாகமத்தின்படி இல்லாமல், பிரிவு சபைகள் தங்கள் விருப்பத்திற்கு ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்டு, லுத்தரன் என்று வைத்துக் கொண்டது (I கொரி. 1 : 1. ரோமர் : 16 : 16).

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள தகுதி பெற்றவர்கள் விசுவாசிக்க முடிந்த பெரியவர்கள் என்ற நிலையிலிருந்து, குழந்தைகள் என்று மாற்றப்பட்டது (மாற்கு. 16; 15, 16). ஞானஸ்நானத்தில் இயேசுவோடு நாமும் அடக்கம் செய்யப் படவேண்டும் என்பதால், முழுக வேண்டும் என்ற நிலையிலிருந்து ஊற்றுதல், தெளித்தல் என்று மாற்றப்பட்டிருக்கிறது (ரோமர். 6; 3-5).

இயேசுவின் வசனத்தின்படியே நாம் நியாயந்தீர்க்கப்படப் போவதால் அதினாலேயே நடத்தப்பட வேண்டும் என்ற நிலை மாறி, மனிதன் வகுத்த கோட்பாட்டு புத்தகம் நம்மை கட்டுப்படுத்துகிறது என்றாகி விட்டது (யோவான். 12; 48).

ஆராதனை முறையிலும், கூட்டலும், குறைத்தலும் செய்யப்பட்டிருக்கிறது (அப். 2 ; 42, எபே. 5 ; 19).

இரட்சிப்பின் திட்டமும் விட்டு வைக்கப்படவில்லை, நல்லவர்களாகவே இருந்தால் போதும். விசுவாசித்தால் மாத்திரம் போதும் என்று மாற்றப்பட்டது (அப். 2 ; 37 – 40; யாக். 2 ; 24).

ஒரே சபையாக ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்ற நிலை அடித்து நொறுக்கப்பட்டு ஆயிரக்கணக்கான போட்டி சபைகள் உண்டாயிருக்கிறது (யோவான். 17; 20–23). இப்படிப்பட்ட மாற்றங்கள் ஆதிக் கிறிஸ்தவத்தை, விசுவாசிகளின் கண்கள் தெளிவாக காணமுடியாதபடி செய்தது. சர்வ ஞானம் கொண்ட தேவன் வடிவமைத்த சபையை, தவறு செய்யக்கூடிய மனிதன் மாற்ற முற்பட்டதை நினைக்கும் போதுதான் நமக்கு பிரச்சனையின் தன்மை மிகவும் பெரிதானதாயிருக்கிறது. தேவன் செய்த ஒரு காரியத்தை இன்னும் சிறப்பாக நாம் செய்வோம் என்ற நம்பிக்கையை மனிதன் ஒரு போதும் பெற்றுக் கொள்ள முடியாது, நாம் ஞானத்தில் குறைவுள்ளவர்கள்.

**கிறிஸ்துவின் சபை ஒரு புதிய பிரிவு சபை அல்ல**

மீட்டமைத்தல் என்றால் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் எல்லா பிரிவு சபையை விட நல்லதை நாம் உருவாக்குகிறோம் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்லவில்லை. கிறிஸ்து தனது சபையை கட்டினார். (மத். 16; 18) அதை ஒரே சரீரம் என்றும் கூறினார் (எபே. 1; 22), 4;4). பிரிவினைவாதம் புதிய ஏற்பாட்டில் கண்டிக்கப்பட்டுள்ளது (1. கொரி 1 ; 10, ரோமர். 16 ; 17) ஒருவேளை இருப்பதை விட இன்னும் சிறப்பானதாக நாம் உண்டாக்குவோமானால் அதுவும் தேவனுடைய பார்வையில் தவறாகும். மனிதன் தன் வழியை வாய்க்கப் பண்ணவும் முடியாது. தன் சொந்த சபையை கட்டவும் முடியாது (எரேமியா.10 ; 23).

**இது ஒரு மறுமலர்ச்சி அல்ல..**

ஏற்கனவே இருக்கும் ஒரு பிரிவினை சபையை நாம் மறுமலர்ச்சி செய்ய நாடவில்லை. மார்ட்டின் லூதர் மற்றும் ஜான் கால்வின் ஆகியோர் குறைகள் நிறைந்த ரோமன் கத்தோலிக்க சபையை மறுமலர்ச்சி செய்ய முயற்சித்தார்கள். ஆனால் மற்றவர்களைப் போலவே இவர்களும் அந்த சபையை மறுமலர்ச்சிப்படுத்துவது மிகவும் சிரமமானது என தெரிந்து கொண்டார்கள். மறுமலர்ச்சி என்றால், “குறையுள்ளதை, பழுதுள்ளதை, சீர்செய்வது” (வெப்ஸ்டார் ). மறுமலர்ச்சி செய்தவர்கள் அந்த காரியத்தில்

வெற்றி பெற்றிருந்தாலும், எல்லா பழுதுகளையும் நீக்குவதில் வெற்றி கண்டிருந்தாலும், அவர்கள் அப்படி செய்வதின் மூலம் கிடைத்திருக்கும் இறுதி நிலையும் ரோம கத்தோலிக்க சபையைவிட கொஞ்சம் முன்னேற்றம் அடைந்ததாக இருக்குமே தவிர, எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்ட கர்த்தருடைய சபையாக அது இருக்க முடியாது ( மத். 16;18).

நமது இலக்கு, பிரிவினைவாதங்களையெல்லாம் கடந்து, முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் பிரசங்கிக்கப்பட்ட, கடைபிடிக்கப்பட்ட சபையை கண்டடைவதுதான். இயேசு ஸ்தாபித்த சபை தேவனுடைய சித்தத்தின்படியே அமைந்திருக்கிறது. அதனுடைய விசுவாசம், ஆராதனை, எல்லாமே மனித குலத்திற்கு ஏற்றதாக இருக்கிறது. ஆவியானவரால் ஏவப்படாத மனிதர்கள் எப்பொழுதெல்லாம் கிறிஸ்தவத்தை சிறப்பாக மாற்றுகிறோம் என நினைத்தார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் அதை சீர்கேடடைய செய்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. கைவினையால் செய்யப்படும் பொருட்களை சேகரிக்கிற ஒருவன் போலிகளை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டான். அசலைத் தேடி கண்டுபிடிக்கும் வரை அவன் ஓய்வதில்லை. ஆபரண வியாபாரியை போல விலையுயர்ந்த முத்துக்களைக் கண்டு, தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறேனே (மத்.13; 45, 46) நாமும் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்க வேண்டும். இயேசுவின் வார்த்தைகள் நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கப்போகிற படியால் அதை நாம் கேட்டுப் பின்பற்ற வேண்டும் ( யோவான்.12;48).

### சிறந்ததையே நாடுவோம்

புதிய ஏற்பாட்டுச் சபையை மீட்டமைக்க நாடும் நாம், அதை எருசலேம், கொரிந்து, லவோதிக்கேயா போன்ற சபைகள் போல அமைக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. ஒவ்வொரு பிராந்திய சபையும் மனிதர்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. சபை எப்படியிருக்க வேண்டும் என்ற திட்டம் பரலோகத்தில் உண்டாக்கப்பட்டது உண்மையாக இருந்தாலும், சபையை நடைமுறைப்படுத்துகிறவர்கள் மனிதர்கள்தான். அவர்கள் தவறு இழைப்பதற்கு ஏதுவானவர்கள்தானே! (ரோமர். 3;23). அதன் விளைவாக, மனிதனுக்கு இயல்பான குறைபாடுகள் ஒரு பிராந்திய சபையில் பிரதிபலிக்கப்படுவதை நாம் காணலாம். சிலர் நல்லவர்களாக இருக்கிறார்கள். சிலரோ சுமாரனவர்கள்! சிலர் மோசமானவர்களாக இருப்பதுண்டு. ஆனால் சரியான அளவுகோல் நமக்கு வேதாகமமாயிருக்கிறது. நாம் அதன்படியே தான் நம்மை அமைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய விசுவாசத்திற்கடுத்த காரியத்திலும் நம்முடைய நடத்தையிலும் நாம் வேதத்தை பின்பற்றினால், நாமும் அப்போஸ்தலர்களைப் போலவே ஒற்றுமையாக, ஒரே விதமான கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

புதிய ஏற்பாட்டை மீட்டமைக்க வேண்டும் என்ற இந்த அறைகூவல் உலகம் அனைத்துக்கும் விடப்படும் ஒன்றாகும். இயேசுவால் தோற்றுவிக்கப்பட்ட அந்த உலகளாவிய ஒரே சபையை அமைக்க முற்படுவோம். அந்த சபைக்கே அவர் இரட்சகராயிருக்கிறார் (மத்.16;18, எபே.5;23).

உலகம் அனைத்திற்கும் வேதாகமம் ஒன்றே. விசுவாச வாழ்விற்கும், நடத்தைக்கும் ஏற்ற ஒரே சட்டமாயிருக்கிற, தேவனுக்கு சேவை செய்வதற்கும், பரலோகத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்கும் அது ஒன்றே போதுமானதாக இருக்கிறது. (II தீமோ. 3 ; 16, 17). அந்த சபையின் அறிக்கை உலகம் அனைத்திற்கும் ஒன்றாக இருக்கிறது. அது இயேசு தேவனுடைய குமாரன் என்பதாகும். (மத். 16 ; 16).

வேதாகப் பெயரே அதற்குப் பயன்படுத்தப்படுகிறது, கிறிஸ்தவன், சீஷன், சகோதரன், பரிசுத்தவான்கள், கிறிஸ்துவின் சபை (அப். 11; 26. மத். 23 ; 8 ரோமர் : 16 ; 16).

கிறிஸ்து போதித்தது போலவே ஞானஸ்நானத்தையும், கர்த்தருடைய பந்தியையும் இது கடைபிடிக்கிறது (மாற்கு. 16 ; 15,16 கொலோ. 2 ; 12 மத்தேயு. 26 ; 26-29).

அதன் ஒரே நோக்கம் பரலோகத்தில் இருப்பதைப் போலவே, பூலோகத்திலும் தேவனுடைய ராஜ்யம் வளர்ந்து பெருக வேண்டும் என்பதே ஆகும் (மத். 28; 18-20)

ஒரு நேர்மையான உள்ளம் கொண்டவன் பின்வரும் காரியத்தை ஏன் மறுக்க வேண்டும்?

மனிதனால் தரப்படுகிற எல்லா நாமத்தையும் தள்ளிவிட்டு கிறிஸ்துவின் நாமத்தையே தரித்துக் கொள்ளவேண்டும். ஜீவனுள்ள, ஆளுகை செய்கிற கிறிஸ்துவே சபை பின்பற்றப்படவேண்டியவர். கிறிஸ்துவின் புதிய ஏற்பாடே சபையின் ஒழுங்கிற்கான புத்தகம்... கிறிஸ்து தன் சபையின் மீது முழு ஆளுகை செய்கிறார்... கிறிஸ்துவினுடைய சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட சபையை விட உயர்ந்தது... கிறிஸ்துவின் எல்லா கட்டளைகளையும் கைக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருக்கிறவர்கள் அவருடைய சிந்தையை வெளிப்படுத்த வேண்டும். விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம், இவைகளால் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாயிருக்க வேண்டும்.

இப்படி நாம் செய்தால் மனிதன் கட்டிய சபையைக் காட்டிலும் எல்லா விதத்திலும் உயர்ந்த, கிறிஸ்துவை அஸ்திபாரமாகவும், தலைவராகவும் கொண்ட கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை நாம் மீட்டமைக்க முடியும்.

தமிழில் : **J. பிக்கின்ஸ்**

# அதிக மேன்மையான வழி

(I கொரி. 12 : 31).

அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம் அந்நிய பாஷைகளானாலும் ஒய்ந்து போம் அறிவானாலும் ஒழிந்து போம் (1. கொரி. 13 : 8).

பவுல், 1. கொரி. 12-14 அதிகாரங்களில், கொரிந்தியருக்கு ஆவிக்குரிய வரங்களைப் பற்றின விளக்கங்களை கொடுக்கிறார்.

காரணம் அவர்கள் ஆவிக்குரிய வரங்களை அவமாக்கி வந்தனர்.

எது அந்நிய பாஷை? எப்படி இதை அவமாக்கினர்? அந்நிய பாஷையைப் பற்றி பேசும்போது ஏன் அன்பு அங்கே ஊடாக பேசப்படுகிறது?

இன்றைக்கும் மக்கள் அந்நிய பாஷையை பேசுகிறார்களா? இந்த கேள்விகளுக்கு நாம் பதிலைக் கண்டு பிடித்தல் வேண்டும்.

**1. முதலாவது : - அந்நிய பாஷை என்பது ஒரு மொழியாகும்.**

அந்நிய பாஷை பேசும் வரமென்றால், கற்றுக் கொள்ளாத வேறொரு மொழியை பேசும் திறமையாகும். இது இரண்டு காரணங்களினால் முக்கியமானது. ஒரு தனிப்பட்ட மனிதனில் தேவன் கிரியை நடப்பிக்கிறதற்கான சான்று. மற்றொன்று ஊழியப் பணியில் இது மிகவும் உபயோகமானது. பெந்தெகொஸ்தே நாளில், அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர், அந்நிய பாஷையில் பேசும் வரத்தை பொழிந்தருளினார் அவர்கள் (அப்போஸ்தலர்கள்) அந்நிய பாஷையில் பேசினார்கள். அந்நாளில் தேசாந்திரிகளாக திரிந்த யூதர்கள் ஒன்று கூடி வந்திருந்தனர். அவர்களுக்கு எபிரேய பாஷை அவ்வளவாகத் தெரியாது. இரண்டாம் மொழியான கிரேக்க மொழி தெரியும். உலகெங்கிலும் சிதறியிருந்ததினால் பல மொழிகளை பேசினர். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் பேசுவதை அவர்கள் கேட்டு ஆச்சரியப்பட்டனர். தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் கேட்டதினால், "கலக்கமடைந்தனர்" (அப். 2 ; 6).

நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமோ இதெப்படி? (அப். 2 ; 8) என்று ஆச்சரியப்பட்டனர். 4ம் வசனத்தில், அப்போஸ்தலர்கள் வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினர். இவர்கள் பேசின பாஷைகளை மொழிகள் என்று 6ம் வசனத்திலும், 8ம் வசனத்திலும் விளக்கமளிக்கின்றார் ஆவியானவர். ஆகவே அந்நிய பாஷை (Tongue) என்பது மொழி (Language) என்று பவுல் விளக்குகிறார் (1. கொரி. 14 : 27, 28).

இன்றைய அந்நிய பாஷை பேசுதலை ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்ட உண்மையென்னவென்றால், இது ஒருவகையான "அர்த்தமற்ற உளருதல் மொழி" என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

அந்நிய பாஷை பேசுபவர் ஒரு நிமிடம் பேசினால் விளக்கமளிப்பவர் ஐந்து நிமிடங்கள் எடுத்து கொள்வார் காரணம்.

ஏதாவது கற்பனை செய்து புனைந்து பேசவே இந்த கால நீடிப்பு.

அந்நிய பாஷை பேசுபவர்கள் ஒரே மாதிரியானவைகளையே எங்கும் பேசுவார்கள். விளக்கமளிப்பவர்கள் சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு விளக்கங்களை சொல்லிக் கொண்டு வருவார்கள்.

ஒரு முறை - சில கல்லூரி மாணவர்களிடம் தங்களுக்கு தெரியாத பாஷையில் ஏதாவதொன்றை உளரச் செய்து தங்களால் எவ்வளவு உளர முடியுமோ அவ்வளவு உளரச் செய்து அதை "டேப் ரிக்கார்டரில்" பதிவு செய்தனர். அடுத்த படியாக, பெந்தெகொஸ்தே பிரிவு கூட்டத்தார் பேசின அந்நிய பாஷையை பதிவு செய்தனர். இந்த இரண்டு பதிவுகளையும், வேறொரு பெந்தெகொஸ்தே கூட்டத்தாரிடம் போட்டு கேட்கச் செய்தனர். இந்தக் கூட்டம், மேலே பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டும் அந்நிய பாஷைதான் என்று அங்கீகாரமளித்தனர். சிரிப்பு! என்னவென்றால், கல்லூரி மாணவர்கள் வேடிக்கையாக உளறினதுதான் உண்மையாகவே அதிகமாக ஆவியில் நிறைந்து பேசப்பட்ட அந்நிய பாஷை என்றனர்.

ஒரு மிஷினரியின் மகன் ஆப்பிரிக்காவில் படித்துக் கொண்டிருந்தபோது, ஆப்பிரிக்க மொழியை பேசக் கற்றுக் கொண்டான். பெந்தெகொஸ்தெகாரர்களின் அந்நிய பாஷை கூட்டத்தில் ஒரு முறை கலந்து கொண்டபோது இவர் என்ன செய்தார் தெரியுமா? ஆப்பிரிக்க மொழியில் கர்த்தர் கற்பித்த ஜெபத்தை சொன்னார் (மத் 6; 9-13). அந்நிய பாஷைக்கு விளக்கமளிப்பவர் எழுந்து நின்று என்ன விளக்கம் சொன்னார் தெரியுமா?

"இயேசுவின் இரண்டாம் வருகை"யை பற்றின செய்தி இதுவென்று சொன்னாராம். எல்லோரையும் எப்படி முட்டாளாக்குகிறார்கள் பாருங்கள்.

அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த பரிசுத்த ஆவியானவரின் வரமல்ல, இவர்கள் பெற்றிருக்கிற வரம். இன்றைக்கு பயிற்சி வகுப்புகள், நடத்தியும் கற்றுக் கொடுத்தும் அந்நிய பாஷையில் பேசுகின்றனர்.

**2. இரண்டாவதாக : எப்படி கொரிந்தியர் இந்த வரத்தை அவமாக்கினர்?**

கொரிந்தியர் - சபையின் பக்தி விருத்திக்காக இதை பயன்படுத்தாமலும், இழந்து போனதை தேடி, ஆத்தும ஆதாயப்படுத்துவதற்கு பதிலாக, தங்களை உயர்த்தி காட்டுவதற்கே அதிகமாக பயன்படுத்தினர் (I கொரி. 14; 4, 5, 17, 18) அற்புத வரங்களிலேயே இதுதான் கடையாந்தர வரமாகும். (I கொரி. 12; 31, 14 : 5) அநேக வரம்புகளை பவுல் அவர்களுக்கு , பாஷைகளை பேசுவதற்கு விதிக்கிறார். வியாக்கியானம் செய்கிறவரில்லையென்றால் பாஷை பேசுகிறவர்

அமைதலோடிருக்கச் சொல்லுகிறார். ஏனெனில் இவர்கள் சபைக்கு எந்த வகையிலும் பிரயோஜனமில்லை என்கிறார் (1. கொரி. 14 ; 5, 19, 27, 28)

ஆரம்ப கால சபையில் பாஷை பேசுவது, விசுவாசத்தின் தலையாய ஒன்றல்ல. ஆனால் இன்றைக்கு இதை தலையாய ஒன்றாக பெந்தேகொஸ்தே மக்கள் பேசுகின்றனர்.

**3. மூன்றாவதாக : - அந்நிய பாஷையைப் பற்றி பேசும்போது, ஏன் அன்பைப் பற்றி ஊடாக பேசுகிறார்?**

கொரிந்தியர்களுடைய மேட்டிமையான சிந்தைகளில் ஒன்றாக இந்த அந்நிய பாஷை வரமிருந்தது. பேசுகிற இவர்கள் பேசாத மற்றவர்களை மிகவும் கேவலமாக பேசித் திரிந்தனர். இன்றைய பெந்தெகொஸ்தேவினரைப் போல பவுல் சொல்லுகிறார் 1. கொரி. 12 ; 12-31-ல் எல்லாவற்றையும் சரீரமான சபையின் பக்தி வளர்ச்சிக்கு ஏதுவாக இசைந்து செயல்பட வேண்டும். ஆகவேதான் அவர், **இதனிலும் மேன்மையான வழியை** காட்டுகிறதாக சொல்லுகிறார். (I கொரிந்தியர். 12 ; 31).

அன்பு இல்லாமல் பாஷையை பேசுகிறது முட்டாள் தனம் என்கிறார் ( I கொரிந்தியர் 13 ; 1). அன்புதான் எல்லாவற்றிற்கும் திறவுகோல். தன்னைதானே வளர்ப்பதற்கு பதிலாக மற்றவர்களுடைய வளர்ச்சிக்கேதுவாக அன்பு கூருதல் வேண்டும் ( 1. கொரி. 14 ; 4).


**4. நான்காவதாக : இன்றைக்கும் மக்கள் அந்நிய பாஷை பேசுகிறார்களா?**

இன்று படித்து கற்று பல பாஷைகளைப் பேச முடியும். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் அல்ல காரணம் புதிய ஏற்பாடு முழுமையாக்கப்பட்டவுடன் இந்த வரம் எடுபட்டு போய்விட்டது. ஒரு காரணத்தினால் இந்த வரத்தை தவறாகப் புரிந்துள்ளனர். காரணம், தவறான விளக்கம் அளித்துள்ளனர். ஆண்டவருடைய மகிமையினால் நிறைந்து உணர்ச்சி வசப்பட்டு ஏதோ ஒன்றை உளருவதை, அந்நிய பாஷையென்று தவறுதலாக போதிக்கின்றனர். ஆகவே ஈடு இணையற்ற கிறிஸ்தவத்தின் ஒருமைப்பாடு அழிக்கப்பட்டு விட்டது. இன்றைக்கும் அழிக்கப்படுகிறது.

ஆராதிக்கும் போது உணர்ச்சி வயப்பட்டு உச்சநிலையில் தாறுமாறாக ஏதாவது ஒன்றை உளருவதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அது பரிசுத்த ஆவியானவரின் வரம் என்பதைத்தான் மறுக்கிறோம். இது தேவனிடத்திலிருந்து வரவில்லை. இது மனித சிந்தை மனோநிலையில் ஏற்படுகிற உணர்வுகளின் குழப்ப நிலை விளைவு - உளருதல் பாஷை - இதில்லாமல் வேறேயில்லை. ....

*(தொடரும்)*


**தமிழில் : தானியேல் துரைராஜன்**
திருச்சி



# HEAR THE VOICE OF TRUTH

**ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



**FOR FREE DISTRIBUTION ONLY**

***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த
வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

### ஓர் இலவசப் பயிற்சி

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு

சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**